24/III-1(a)(T)—W/P

©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 5.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 25] சென்னை, புதன்கிழமை, ஜூலை 6, 2011
ஆனி 21, திருவள்ளுவர் ஆண்டு – 2042

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 132, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(M2)த் துறை, 21 ஜூலை 2010.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக் கூடிய அனைவரின் தகவலுக்காக, இதனால் வெளியிடப்படுகிறது.

2. வரைவுத் திருத்தங்கள், இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், அது தொடர்பாக, யாதொரு நபரிடமிருந்து வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை, தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அவற்றை தொழிற்சாலைகள், சென்னை–600 005–இல் உள்ள தொழிற்சாலைகள் ஆய்வாளர் மூலம், அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச்செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்கவேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில்,

(1) 61 ஆம் விதியில்,

(a) துணை விதி (3)–ல் ஓரத்தலைப்பிற்கு, பின்வரும் ஓரத்தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"மின்னலுக்கு எதிரான பாதுகாப்பு''

(b) துணை விதி 10–ல் பகுதிகள் (b) மற்றும் (c) க்கு பதிலாக, பின்வரும் பகுதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அதாவது:–

(c) கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ள வெவ்வேறு தீ விபத்து இடர்ப்பாடு வகைகளைக் கருத்திற்கொள்வதன் மூலம் வகை செய்யப்பட வேண்டிய முதலுதவி தீயணைப்புச் சாதனத்தின் வலைகள் பற்றி தீர்மானிக்கப்படவேண்டும்.

(i) "A" வகை தீ விபத்து தீயை அணைப்பதற்கு மரக்கட்டை காகிதம் போன்ற கனியச் சேர்மான தன்மையுடைய எளிதில் தீப்பற்றத்தக்க எண்ணிய பொருட்கள் சம்பந்தப்பட்ட தீ விபத்து.

1. அபாயக் குறைவாக உள்ள தொழில்கள்

(1) உராய்வுத் தன்மையுள்ள பொருள் தயாரிப்பு வளாகம்

(2) சோடா தயாரிப்பு தொழிற்சாலைகள்

(3) ஊதுபத்தி தயாரிப்பு

(4) அலுமினியம், துத்தநாகம், தாமிரம் தொழிற்சாலைகள்

(5) பகுப்பாய்வு மற்றும் அல்லது தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடங்கள்

(6) நீராவியை சிப்பம் செய்யும் கல்நார் செய்யும் பொருளை மற்றும் கொதிகலத்தின் மின் கடத்தாத மூடியைத் தயாரிப்போர்

(7) மின்கலத்தை செறிவூட்டுகிற/பழுதுபார்க்கிற நிலையம்

(8) மின்கலம்தயாரிப்பு

(9) வடிசாலைகள்

(10) செங்கல் தயாரிப்பு பணிகள்

(11) பிரம்பு தயாரிப்புத் தொழிற்சாலை

(12) ஏலக்காய் தொழிற்சாலை

(13) சிமிட்டி தொழிற்சாலை மற்றும் அல்லது கல்நார் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலைகள்

(14) பீங்கான் தொழிற்சாலைகள் மற்றும் மட்பாண்டங்கள் மற்றும் சுட்ட கற்குழாய் தயாரிப்பு

(15) திரையரங்குகள் (திரைப்பட முன் வெளியீட்டு அரங்குகள் உட்பட)

(16) களிமண் பொருள் தயாரிப்புகள்

(17) கடிகாரம் மற்றும் கைக்கடிகாரம் தயாரிப்பு

(18) மனமகிழ் மன்றங்கள்

(19) காப்பிக் கொட்டை சுத்திகரிப்பு மற்றும் காப்பிக் கொட்டை வறுக்கிற வளாகங்கள்

(20) கணினிகளை நிறுவுதல் (முதன்மைச் சட்டம்)

(21) பால் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், பால் குளிரூட்டும் தளவாடம் மற்றும் பால் பண்ணைகள்

(22) மிட்டாய் தயாரிப்பு

(23) குடியிருப்புகள்

(24) கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்

(25) மின் உற்பத்தி நிலையங்கள் (புனல் மின் சக்தி)

(26) மின்விளக்குகள் (பிரகாசிக்கிற மின் விளக்குகள் மற்றும் குழாய் மின் விளக்குகள்) மற்றும் தொலைக்காட்சி காட்சித்திரை (பிக்சர் டியூப்) தயாரிப்பு.

(27) துணை மின் நிலையம்/மின் வழங்கல் நிலையம்

(28) மின் பகுப்பு முறையில் முலாம் பூசுகிற பணிகள்

(29) மின்னணு மற்றும் கணினி சாதனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தயாரித்தல், மின்னணு அல்லது கணினி சாதனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தயாரித்தல்.

(30) காலியான கொள்கலன்கள் சேமிப்பிடம்

(31) பொறியியல் பணிக்களரிகள்

(32) பழங்கள் மற்றும் காய்களின் நீர்ச்சத்தை வெளியேற்றுகிற / உலர வைக்கிற தொழிற்சாலைகள்

(33) பழத் தயாரிப்புப் பொருட்கள் மற்றும் சுவையூட்டும் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலைகள்

(34) கண்ணாடி மற்றும் கண்ணாடியிழை தயாரிப்பு

(35) எளிதில் தீப்பற்றாத பொருட்களை சேமித்து வைக்கிற சேமிப்புக் கிடங்குகள்

(36) பசுமை இல்லங்கள்

(37) தங்கயிழை தயாரிப்பு / தொழிற்சாலைகள் / தங்க முலாம் பூககிற தொழிற்சாலைகள்

(38) பசை மற்றும் பிசின், எலும்புப் பசை தயாரிப்பு பசை அல்லது பிசின் மற்றும் எலும்புப் பசை தயாரிப்பு

(39) எக்ஸ் கதிர் படமெடுத்தல் மற்றும் ஏனைய நோய்க்குறி அறிகிற மருந்தகங்கள் உட்பட்ட மருத்துவமனைகள்

(40) பனிகற்கண்டு மற்றும் பனிக்கூழ் (Ice cream) தயாரிப்பு

(41) பனிக்கட்டி தயாரிப்பு தொழிற்சாலைகள்

(42) எழுது மை (அச்சிடுவதற்கான மை நீங்கலாக) தயாரிப்பு தொழிற்சாலைகள்

(43) சலவையகங்கள்

(44) நூலகங்கள்

(45) அபிரகப் பொருட்கள் தயாரிப்பு

(46) அலுவலக வளாகங்கள்

(47) வழிபாட்டுத் தலங்கள்

(48) மட்பாண்ட தயாரிப்புப் பணிகள்

(49) கோழிப் பண்ணைகள்

(50) தங்குமிட வசதியுள்ள ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள்.

(51) உப்பு அரைவைத் தொழிற்சாலைகள் மற்றும் சுத்திகரிப்பு ஆலைகள்

(52) தொழுவங்கள்

(53) உருக்கு ஆலைகள் (வாயுவை அடிப்படையாகக் கொண்டவை தவிர ஏனையவை)

(54) கல்கண்டு தயாரிப்பு

(55) சர்க்கரை ஆலைகள் மற்றும் சுத்திகரிப்பு ஆலைகள்

(56) தேயிலை கலவை மற்றும் தேயிலையைச் சிப்பம் செய்யும் தொழிற்சாலை

(57) குடைகள் தயாரிப்புத் தொழிற்சாலைகள்

(58) சேமியா தயாரிப்புத் தொழிற்சாலைகள்

(59) நீர் கத்திகரிப்பு / நீர் வடிகட்டும் தளவாடங்கள் மற்றும் நீரேற்று நிலையம்

**2. சாதாரணமான வகையில் அபாயம் ஏற்படக்கூடிய தொழில்கள்**

1. விமான நிலையம் மற்றும் ஏனைய போக்குவரத்து வாகனங்களின் முனையக் கட்டிடம்
2. கொட்டைப் பாக்குகளை நறுக்குகிற மற்றும் / அல்லது வெற்றிலைப் பாக்கு தொழிற்சாலைகள்
3. மைதா மற்றும் பருப்பு வகைகளை அரைத்தல்
4. ரொட்டி தயாரிக்குமிடங்கள்
5. பீடித் தொழிற்சாலைகள்
6. 'பிஸ்கெட்' தயாரிப்புத் தொழிற்சாலைகள்
7. 'பாபின்' தொழிற்சாலைகள்
8. புத்தகம் கட்டுவோர், உறைகள் மற்றும் காகிதப்பை தயாரிப்போர்
9. பெரிய சேமிப்புக் கிடங்கு
10. கம்பி வட தயாரிப்பு
11. சூடத்தை கொதிக்க வைத்தல்
12. மெழுகுவர்த்தி தயாரிப்புப் பணிகள்

13. கார்பன் காகிதம் / தட்டச்சு இயந்திர நாடா தயாரிப்போர்
14. அட்டைப் பெட்டி தயாரிப்பு
15. தச்சர்கள், வெட்டு மரம், கம்பளி மற்றும் அறைக்கலன் தயாரிப்போர்
16. தரைவிரிப்பும் மற்றும் முரட்டுக் கம்பளித் துணி தயாரிப்புத் தொழிற்சாலைகள்
17. முந்திரிக் கொட்டை ஆலைகள்
18. வேதியியல் பொருள் தயாரிப்பு
19. சுருட்டு மற்றும் 'சிகரெட்' தயாரிப்பு தொழிற்சாலைகள்
20. காப்பிக் கொட்டை அரைக்கும் வளாகங்கள்
21. கயிறு தயாரிப்பு தொழிற்சாலைகள்
22. கயிறினாலான தரை விரிப்புகள், முரட்டுக் கம்பளம் தயாரிப்பு மற்றும் புகையிலை, உரிவைகள் மற்றும் தோல்
23. குளிர்ப்பதன சேமிப்புக் கிடங்கு வளாகங்கள்
24. தக்கை மூடி பொருட்கள் தயாரிப்பு
25. உலர் சலவை, சாயம் தோய்த்தல், சலவையகங்கள்
26. மின் உற்பத்தி நிலையங்கள் (புனல் மின்சக்தி நீங்கலாக)
27. எனாமலினாலான பொருட்கள் தயாரிப்பு ஆலைகள்
28. வடிகட்டிகள் மற்றும் மெழுகு காகிதங்கள் தயாரிப்பு
29. மாவாலைகள்
30. சீருந்து நிறுத்துமிடங்கள்
31. ஆயத்த ஆடை தயாரிப்போர்
32. நெய் தயாரிப்பு ஆலைகள் (தாவர தயாரிப்பு நீங்கலாக)
33. கிடங்குகள் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் (ஏனையவை)
34. தானியம் மற்றும் அல்லது விதைகளைப் பிரிக்கிற மற்றும் / அல்லது அரைக்கிற ஆலைகள்
35. உராய்வைத் தடுக்கும் பொருள் (கிரீஸ்) தயாரிப்பு
36. குல்லாய் மற்றும் தொப்பி தயாரிப்பு தொழிற்சாலைகள்
37. உள்ளாடை, லேஸ், பூ வேலைப்பாடு மற்றும் நூல் தயாரிப்பு ஆலைகள்
38. பிரகாசிக்கிற வாயுவைக் கொண்ட மெல்லிய ஒளித்திரை வலை தயாரிப்போர்
39. உப்பீனியோடு சேர்க்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் வாயுக்கள் உட்பட தொழிலக வாயு தயாரிப்பு
40. மெருகிட்ட மெழுகுத் துணிவகை தயாரிப்புத் தொழிற்சாலைகள்
41. கையினால் தயாரிக்கப்படுகிற நூலிழை / நாறிழை தயாரிப்பு (அக்கிரிலிக் நீங்கலாக) (except Acrylic)
42. எரு மற்றும் இரசாயன உரத் தயாரிப்புப் பணிகள் (ஒன்றாகச் சேர்த்தல், கலக்குதல் மற்றும் குருணையாக்குதல்)
43. வணிகம் சார்ந்த தொழில்கள் (பல்பொருள் அங்காடிகள், கடை வளாகங்கள் அல்லது மால்கள்)
44. கனிம எண்ணெய்யை ஒன்றாகச் சேர்த்தல் மற்றும் செய்முறைப்படுத்தல்.
45. அருங்காட்சியகங்கள்
46. எண்ணெய் மற்றும் தோலினாலான துணி ஆலைகள்
47. அதிக அபாயமுள்ள A-இன் கீழ் வகைப்படுத்தப்பட்டவை தவிர ஏனைய எண்ணெய் முனையங்கள் / சேமிப்புக் கிடங்குகள்
48. ஆக்ஸிஜன் தளவாடங்கள்
49. மேலொட்டு அட்டை தயாரிப்பு / மரச்சாமான்கள் மீது மேலொட்டுமானம் செய்யும் பொருட்கள் (plywood) தொழிற்சாலைகள்.

50. காகிதம் மற்றும் காகிதப் பலகை தயாரிப்பு ஆலைகள்
51. பாலந்தாங்கிகள், கப்பல் துறையகம், கப்பல் பட்டறை
52. 'பிளாஸ்டிக்' பொருட்கள் தயாரிப்பு
53. அச்சக வளாகங்கள்
54. தூளாக்குறி மற்றும் அரைக்கிற ஆலைகள்
55. அரிசி ஆலைகள்
56. கயிறு திரிக்கும் பணிகள்
57. ரப்பர் பொருட்கள் தயாரிப்பு
58. ரப்பர் 'டயர்கள்' மற்றும் 'டியூபுகள்' தயாரிப்பு
59. அரக்கு தயாரிப்பு தொழிற்சாலைகள்
60. அங்காடி வளாகங்கள் (தரைத் தளத்திற்கு கீழ்)
61. பட்டு இழை சுற்றுதல் மற்றும் பட்டுப்புழுக்கூடு பண்டக சாலைகள்
62. திவளை தூவுகிற முறையில் வண்ணம் தீட்டுதல்
63. சோப்புகள் மற்றும் 'கிளிசரின்' தயாரிப்புத் தொழிற்சாலைகள்
64. 'ஸ்டார்ச்' தயாரிப்பு தொழிற்சாலைகள்
65. உருக்கு ஆலைகள் (வாயுவை அடிப்படையாகக் கொண்டது)
66. தோல் பதனீட்டு ஆலைகள் / தோல் பொருட்கள் தயாரிப்போர்
67. அதிக அபாயகரமான "தொழில் A" என்று வகைப்படுத்தப்பட்டவை நீங்கலாக பிற எரிபொருள் சேமிப்புத் தொட்டிகள் அமைந்த பகுதிகள்.
68. நெசவு ஆலைகள்
69. தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலைகள்
70. தொலைபேசி இணையகங்கள்.
71. திரை அரங்குகள் மற்றும் கலையரங்கங்கள்.
72. புகையிலை (மெல்லுதல்) மற்றும் பான் மசாலா தயாரித்தல்.
73. புகையிலை அரைத்தல் மற்றும் பொடித்தல்
74. புகையிலையின் நீர்ப்பசையகற்றும் தொழிற்சாலைகள்
75. கம்பளி ஆலைகள்

**3. மிக அபாயகரமான பகுதிகள்**

**துணை வகை—அ:**

1. வானூர்திகள் நிறுத்தி வைக்கப்படும் பாதுகாப்பான இடம்.
2. அலுமினியம்/மெக்னீசியம் பொடி தயாரிக்கும் தளவாடங்கள்.
3. நிலக்கீலார்ந்த தாள் / முரட்டு சணல் துணி மற்றும் தார் முனைந்த முரட்டு கம்பளித்துணி தயாரித்தல்.
4. பருத்திக் கழிவு ஆலைகள்.
5. கரி மற்றும் கற்கரி / கட்டைக்கரி உருண்டைகள், நிலக்கரி பாளங்கள் தயாரித்தல்.
6. செல்லுலாயிட் பொருட்கள் தயாரித்தல்.
7. சிகரெட் வடிகட்டி தயாரித்தல்.
8. திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கும் நிழற்படப்பிடிப்பு மனைகள்.
9. நிலக்கரி கரங்கங்கள்.

10. பருத்தி விதை கத்தப்படுத்தும்/கட்டுத்துணி தயாரிக்கும் ஆலைகள்.

11. சாராய வடிசாலைகள்.

12. நகல்கள் எடுத்தல் மற்றும் எழுத்துக்கள் வடிவில் வெட்டப்பட்டிருக்கும் அட்டைத்தாள் தயாரித்தல்.

13. பட்டாசு தயாரித்தல்.

14. நுரை நுரையான ப்ளாண்டிக் தயாரித்தல்/அல்லது மின்னோட்டத்தை மாற்றியமைக்க உதவும் தளவாடங்கள்.

15. வைக்கோல் புல், தீவனம் மற்றும் புல் (உமி).

16. சணல் அழுத்தம் தொழிற்சாலைகள்.

17. சணல் ஆலைகள் மற்றும் சணல் அழுத்திகள்.

18. திரவ பெட்ரோலியம் வாயு நிரப்பும் தளவாடங்கள் (சிறியன)*

(*ஒவ்வொரு 8 மணி நேர முறை மாற்றுப் பணியின் போது 100 மெட்ரிக் டன்னிற்கு மிகாமல் திரவ பெட்ரோலிய எரிவாயு நிரப்பும் மற்றும் மொத்தம் 20 மெட்ரிக் டன்னிற்கு மிகாதவாறு நிரப்பும் பொருண்மைத் திறன் கொண்ட தளவாடங்கள்.)

19. தீக்குச்சி தொழிற்சாலைகள்.

20. செயற்கை நார்கள் (அக்ரிலிக் நார்கள்/நூலிழை தயாரித்தல்)

21. மெத்தை மற்றும் தலையணை தயாரித்தல்.

22. உலோக அல்லது தகர அச்சு இயந்திரங்கள் (50 சதவீதத்திற்கு அதிகமான தரைப்பரப்பு பொறியியல் பணிமனையாக பயன்படுத்தப்பட்டுள்ள நேர்வில், அங்கு நடைபெறும் பொறியியல் தொழிலை சாதாரணமான அபாயம் ஏற்படும் தொழிலாகக் கருதப்படலாம்).

23. எண்ணெய் ஆலைகள்.

24. எண்ணெய் பிழிந்து வடிக்கும் தளவாடங்கள் (நெய் ஆலைகள் மற்றும் எண்ணெய் கத்திகரிப்பு தொழிற்சாலைகள்) தவிர ஏனையவை.

25. 32 டிகரி சென்டிகிரேட் அல்லது அதற்கும் குறைவான வெப்பநிலையில் எரிதல்.

26. வண்ண பூச்சுகளும் மற்றும் மெருகு எண்ணெய் (வார்னிஷ்) தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

27. அச்சு மை தயாரித்தல்.

28. மரம் அறுக்கும் ஆலைகள்.

29. உறிஞ்சும் தன்மையுள்ள இரும்பு தளவாடங்கள்.

30. அறுவை மருத்துவத்திற்கான பங்கு தயாரிப்பாளர்கள்.

31. டிகிரி சென்டிகிரேட் மற்றும் அதற்கு குறைவான நீர்ம வெப்பநிலை கொண்ட, எளிதில் தீப்பற்றக்கூடிய திரவங்களை தேக்கி வைக்கும் தொட்டிகள் கொண்ட பகுதிகள்.

32. தார்பாலின் (கருங்கித்தாள்) துணிகள் மற்றும் கேன்வாஸ் (கெட்டி மெழுகார்ந்த) துணிகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

33. கற்பூரத் தைலம் மற்றும் மண்டித் தைல வடிசாலைகள்

34. டயருக்கு ரீட்ரீடிங் மற்றும் ரிசோலிங் செய்கின்ற தொழிற்சாலைகள்.

**துணை வகை–B**

1. அமோனியா மற்றும் யூரியா கலக்கும் தளவாடங்கள்.
2. சி.என்.ஜி. (CNG) அழுத்தி திணித்து அடைக்கும் தளவாடங்கள்.
3. வெடிமருந்து தொழிற்சாலைகள்.
4. திரவ பெட்ரோலிய எரிவாயு அடைக்கும் தளவாடங்கள் (மிகச் சிறியன நீங்கலாக).
5. பெட்ரோலிய இராசாயன தளவாடங்கள்.

**6. பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகள்.**

(ii) வகுப்பு 'B' தீ விபத்து: தீயை அணைப்பதற்கு முரட்டு துணியால் போத்துவது இன்றியமையாததாக இருக்கிற எளிதில் தீப்பற்றக்கூடிய திரவம் அல்லது திரவமாக்கப்படவல்ல திடப் பொருள்கள் தொடர்பான தீ விபத்துக்கள்.

(iii) வகை "C" தீ விபத்து:—

எரிகிற வாயுவை மிக விரைவில் கட்டுப்படுத்த வேதியியல் மாற்றம் இல்லாத வாயு அல்லது தூள் அல்லது தீயை அணைப்பதற்குத் தேவைப்படுகின்ற ஆவியாகும் திரவம் ஆகியவை இன்றியமையாததாக இருக்கின்ற எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் திரவ எரிவாயு போன்றவற்றை அழுத்துவதன் மூலம் உண்டாகும் தீ விபத்து.

(iv) வகை "D" தீ விபத்து:—எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் மெக்னீசியம், அலுமினியம், துத்தநாகம், சோடியம், பொட்டாசியம் போன்றவை நீர் மற்றும் நீர்தாங்கி காரணிகள் மற்றும் சில இனங்களில் கரியமிலவாயு. ஹெலோஜினோடு சேர்ந்த நீரக கரியகம் ஆகியவற்றுடன் எரியும் உலோகம் மீண்டும் சேர்வதால் உண்டாகும் தீ விபத்து. இத்தகைய தீ விபத்துகளில் தீயை அணைப்பதற்கு முக்கிய சாதனம் மற்றும் தொழில்நுட்பங்கள் தேவைப்படுகிறது.

(C) தீயணைப்பு சாதனங்கள் நிறுவுதல் தொடர்பான இந்திய தரநிர்ணய நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கேற்ப, அங்கு அமைக்கப்பட வேண்டிய தீவிபத்து முதலுதவி சாதனங்களின் எண்ணிக்கை மற்றும் வகைகள், இணைப்பு B யின் IS 2190: 1992 இன் படி அமைக்கப்படும்.

(c) துணை விதி (11)—ல்

(i) பகுதி (a)—க்கு பதிலாக கீழ்க்காணும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(a) ஒவ்வொரு தொழிற்சாலையிலும், தீ தடுப்பதற்காக போதிய நீர் வழங்கல் வசதிக்கு வகை செய்யவேண்டும். பிரதான குழாயிலிருந்து இணைப்பு குழாய் மூலம் நீர் கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையில், எளிதில் பெறக்கூடிய தரைப்பரப்பு அல்லது நிலத்தடியின் கீழ் உட்புறம் பூசப்பட்ட நீர்த்தேக்கங்களில் அல்லது தலைப்பிற்கு மேல் வைக்கப்பட்டுள்ள உருக்குத் தொட்டிகளில் சிமிட்டி கற்கலவை அல்லது கல் கட்டுமானத் தொட்டிகளிலோ தண்ணீரை சேமித்து வைக்கவேண்டும். பல்வேறு வகையிலான குடியிருப்புகளுக்கோ, குறைந்த நீர்மட்டதை விட அதிகமாக (நீர் வடிந்து போகும் குறியீடுகளுக்கு மேலாக உள்ள உறிஞ்சுகுழாயின் விட்டத்தை விட மூன்று மடங்குகள் அதிகமாகவும்) அல்லது குழாய் உறைகளின் மேல் மட்டத்திற்கு மேலாக (வெகு அதிகமாக நீர் உறிஞ்சும்போது) (குறைந்த நீர்மட்டத்தைவிட மேலாக இருக்கும் நிலையில்) நீர்த் தேக்கத் தொட்டியின் சேமிப்பு கொள்ளளவும் நீர் இணைப்பு குழாய்களின் அளவும் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| *வ. எண்.* | *அபாயகத்தின் தன்மை.* | *பிரதான குழாயிலிருந்து இணைப்பு குழாய் மூலம் நீர் கொண்டு செல்வதற்கென்றே, ஒதுக்கப்பட்டுள்ள நிலையான நீர்சேமிப்புத் தொட்டியின் கொள்ளளவு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | சிறிய அளவு அபாயத் தன்மை வாய்ந்தவை | 1 மணி நேரத்திற்கு குறையாமல் குறைந்த அளவான 1,35,000 லிட்டர் நீரை வெளியேற்றும் திறன். |
| 2. | சாதாரண அளவில் அபாயத்தன்மை வாய்ந்தவை | 2 மணி நேரத்திற்கு குறையாமல் மொத்தமாக நீர் வெளியேற்றும் திறன். |
| 3. | அதிக அளவு அபாயத் தன்மை வாய்ந்தவை—A | 3 மணி நேரத்திற்கு குறையாமல் மொத்தமாக நீர் வெளியேற்றும் திறன். |
| 4. | அதிக அளவு அபாயத் தன்மை வாய்ந்தவை—B | 4 மணி நேரத்திற்கு குறையாமல் மொத்தமாக நீர் வெளியேற்றும் திறன். |

**குறிப்பு 1:** சாதாரண மற்றும் அதிக அளவு அபாயமுள்ள தொழிற்சாலைகளிலிருந்தும் நீர்த்தேக்க தொட்டிகளின் நீர்கொள்திறனை, நீர் வரத்திற்கேற்ப குறைத்துக் கொள்ளலாம். (சாதாரண அபாயத் தொழிற்சாலைகளுக்கு ஒரு மணி நேரமும், உயர் அளவிலான A அபாய தொழிற்சாலைகளுக்கு 90 நிமிடமும், அதிக அளவிலான B அபாயத் தொழிற்சாலைகளுக்கு 2 மணி நேரமும் நீர் வரத்து அமைய வேண்டும்). இதற்காக குழுவின் (நகர்ப்பகுதி பிரதான குழாய் தவிர ஏனையவை) முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் எக்காரணம் கொண்டும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நீர் தொட்டியின் கொள்ளவுத் திறன் 70% கொள்ளவிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

**குறிப்பு 2:** சிறிய அளவிலான அபாயத் தொழிற்சாலைகளில், கட்டடத்தின் மேல் தளத்தின் உயரம், சுற்றியுள்ள தரைப்பரப்பிலிருந்து 15 மீட்டருக்கு அதிகமாக இருக்குமாயின் நீர்த்தேக்கத் தொட்டியின் குறைந்த அளவு கொள்ளளவு திறன் 2,25,000 லிட்டர் என்ற அளவில் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

(ii) பகுதி (e)—க்குப் பதிலாக, பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

அதாவது:—

(e) தொழிற்சாலைகளில் தீ பரவுவதை தடுப்பதற்குரிய வசதிகளை அளிக்கும் வகையில், தொழிற்சாலைகளைச் சுற்றிலும், பிரதான குழாய்களிலிருந்து நீர் எடுத்துச் செல்லும் ஏற்பாட்டு முறையை செய்ய வேண்டும். பிரதான குழாய்களிலிருந்து நீர் எடுத்துச் செல்வதற்கு இணைப்பு குழாய்கள் வழங்க வகை செய்யும் நேர்வுகளில், பிரதான குழாய்களின் உள்வட்ட அளவானது 15 செ. மீட்டருக்கு குறையாமல் இருக்கவேண்டும் மற்றும் சிறிய அளவில் அபாயமுள்ள பகுதிகளில் சதுர சென்டிமீட்டர் ஒன்றுக்கு 7 கிலோகிராம் நீரமுத்த அளவிற்குக் குறையாமலும், அதிக அளவு அபாயமுள்ள பகுதிகளில் சதுர சென்டி மீட்டர் ஒன்றுக்கு 10 கிலோ கிராம் என்ற நீரமுத்த அளவிற்கு குறையாமலும், ஒரு நிமிடத்திற்கு குறைந்தது 4000 லிட்டர் தண்ணீர் வழங்கும் திறனையும் கொண்டிருக்க வேண்டும். நீரமுத்த அளவை சோதனையிடும் பணி மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு பணி நிறைவுச் சான்றிதழ் ஒன்றை குழாய் நிறுவுப் பொறியாளர் அளிக்கவேண்டும் மற்றும் எந்த நாளிலிருந்து இது முழுமை பெற்றது என்பதற்கான செயல் ஆணை ஒன்றையும் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(d) துணை விதி (14)–க்குப் பிறகு, பின்வரும் துணை விதி சேர்த்துக் கொள்ளவேண்டும்.

"(15) தொழிற்சாலையின் முழுமையான சுற்றுச் சுவர், அதற்குள் அமைந்துள்ள மொத்த கட்டடப்பரப்பு, கட்டடத்திற்குள் இருக்கும் கதவுகள், திறக்கக்கூடிய சாளரங்கள், நாற்புர சுவர்கள் முதலிய விவரங்களைக் காட்டுகின்ற தீ தடுப்பு நெடுநீர்க் குழாய்கள் குறித்த வரைப்படம் ஒன்றை அரசு தீ தடுப்பு இயக்குநர் அல்லது உள்ளூர் அதிகாரி தயாரித்து, தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.";

(e) 1–ஆம் விவர அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணையை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது:–

**"விவர அட்டவணை–I"**

*முதலுதவி தீ தடுப்பு சாதனங்கள்.*

*(1) தீ பரவுவதை தடுப்பதற்கு பயன்படுத்தக் கூடிய*
*வெவ்வேறு வகையான தீ மற்றும் தீ தடுப்பு முதுலுதவி சாதனங்கள்*

| தீ விபத்துக்களின் வகைப்பாடு. | தீ பரவுவதை தடுக்கப் பயன்படுத்தும் பொருட்கள். |
|---|---|
| "A" வகை தீ விபத்துக்கள் | தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் தீயணைப்பு கை பொருட்கள் |
| "B" வகை தீ விபத்துக்கள் | நுரை, உலர் தூள், ஆவியாக்கும் திரவம் மற்றும் கார்பன் டை ஆக்சைடு ஆகிய தீயணைப்பு பொருட்கள். |
| "C" வகை தீ விபத்துக்கள் | உலர் தூள் ஆவியாக்கும் திரவம் கார்பன் டை ஆக்சைடு போன்ற தீயணைப்பு பொருட்கள். |

**குறிப்பு:** (1) மின் சக்தி ஊட்டப்பட்ட மின் சாதனத்தில் தீ பரவும் நேர்வில், மின் கடத்தாத தீயணைப்பு பொருட்களைப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும் மற்றும் உலர் தூள், கார்பன்டை ஆக்ஸைடு போன்ற (உலோகத் தடையற்ற) பொருட்கள் அல்லது ஆவியாக்கும் திரவங்கள் ஆகியவற்றை பயன்படுத்தவேண்டும். மின் சாதனத்திலிருந்து மின் சக்தியை நீக்கியவுடன், தீ விபத்து வகைப்பாடுகளுக்குப் பொருந்துகிற தீ அணைப்புச் சாதனங்களைப் பயன்படுத்துவது பாதுகாப்பாக அமையும்.

(2) சுத்தமாகவும், தூய்மைக்கேடு இல்லாமலும் வைத்திருக்க வேண்டிய முக்கியத்துவமுள்ள மின் சாதனங்கள் அல்லது செயல்திறன் பாதிக்கக்கூடிய வாய்ப்புள்ள மின் சாதனங்களான கட்டுப்பாட்டுக் கருவிகள், மின் சாதனங்கள் மற்றும் மின் ஏற்பாட்டு முறைகள் ஆகியவற்றிற்கு, கார்பன்–டை–ஆக்ஸைடு அல்லது ஆவியாக்கும் திரவ வகையைச் சேர்ந்த தீயணைப்புப் பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(3) நேர் எதிர் பண்புடைய கரைப்பான்களிலும் மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய தண்ணீர் கலந்த ஏனைய திரவங்களினால் ஏற்படக்கூடிய தீ விபத்துகளுக்கு, உலர் தூள் வகை அல்லது வெறியச் சத்து எதிர்ப்புத் திறன் கொண்ட உயிர்ப்புத் திறமற்ற நுரை வகை தீயணைப்பு பொருள்கள் பயன்படுத்தப்பட வேண்டும்';

(2) விதி 61–K–ல் (4), துணை விதிக்குப் பதிலாக, பின்வரும் துணை விதியை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது:–

"(4) சம்பந்தப்பட்ட கண் மருத்துவர் சோதனையிட்ட அல்லது மறு–சோதனையிட்ட ஆவணங்கள் தேவையின் பேரில் அளிக்கப்பட வேண்டும்.";

(3) விதி 77– இல் (4) ஆம் துணை விதியின் (a) பகுதி மற்றும் அதன்கீழ் வருகின்ற வரம்பு நிபந்தனைகளுக்குப் பதிலாக, பின்வரும் பகுதியை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது:–

"(a) பணியாளர் வருகைப் பட்டியலின் 25 ஆம் எண் படிவத்தில், ஈடுசெய்ய விடுமுறைகள் பற்றிய விவரங்களை மேலாளர் வைத்து வரவேண்டும்.";

(4) விதி 80–இல் ஓரத் தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பை சேர்த்துக் கொள்ள வேண்டும், அதாவது–

"உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேடு".

(5) விதி 86–இல்,

(a) ஓரத்தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

“உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேடு,

(b) “படிவம் எண் 14—இல், பதிவேடு ஒன்றை வைத்து வருதல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “படிவம் எண் 12 இல் உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேட்டில், அத்தகைய இளைஞர்களின் விவரங்களை பதிவுச் செய்தல்” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(c) “படிவம் எண் 14—இல் (3 ஆம் நெடும்பத்தி” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “படிவம் எண் 12—இல் (3) ஆம் நெடும்பத்தி” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(6) விதி 95—இல், XX ஆம் விவர அட்டவணையின் 19 ஆம் பத்தியின் (3) துணைப்பத்தியிலுள்ள “படிவம் 27—A” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “படிவம் எண் 27” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(7) விதி 96—இல், (3) ஆம் துணை விதியில், “படிவம் எண் 18-A” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “படிவம் எண் 18” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(8) விதி 100—க்குப் பதிலாக பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:—

“**100. கணக்கு விவர அறிக்கைகள்:—**ஒவ்வொரு தொழிற்சாலையின் மேலாளரும், ஒவ்வொரு காலண்டர் ஆண்டிற்கான ஆண்டு கணக்கு விவர அறிக்கையினை, அடுத்து வருகின்ற ஆண்டில் ஜனவரி மாதம் 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆய்வாளரிடம் சென்றடையும் வகையில் படிவம் எண் 22—இல் இரு படிகளில் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்”.

(9) விதி 104 விட்டு விடப்பட வேண்டும்;

(10) படிவம் எண் (9) விட்டுவிடப்பட வேண்டும்;

(11) படிவம் எண் 12— க்குப் பதிலாக, பின்வரும் படிவம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது

**“படிவம் எண் 12”**

*(விதி 80 மற்றும் விதி 86 இன்கீழ் வரையறுக்கப்பட்டது)*

*உரிய வயதடைந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த பதிவேடு*

*தொழிற்சாலை பெயரும் முகவரியும்:* ஆண்டு: பதிவெண்:

| தொடர் எண் | தொழிலாளரின் பெயரும் குடியிருப்பு முகவரியும் | பிறந்த நாள் | தகப்பனார் பெயர் | முதலில் வேலையில் சேர்ந்த நாள் | பணியமர்த்தப்பட்ட பணியின் தன்மை | படிவம் எண். 11—இல் உள்ளவாறான குழுவின் கடிதம் | முறையாற்றுப் பணிகளில் பணியாற்றுகின்ற நேர்வில் அவற்றின் எண்ணிக்கைகள் | அறுவை சிகிச்சை மருத்துவரால் சான்றளித்து வழங்கப்பட்ட உடல் தகுதி சான்றிதழின் தொடர் எண்ணும், அதன் நாளும் | உடல் தகுதி சான்றிதழ் தொடர்பான அடையாள எண் வளரினம் பருவத்தினராக இருக்கின்ற நேர்வில் சான்றிதழ் எண்ணும், நாளும் | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |

நச்சுப் பொருட்களை வெளிப்பாடு: ...............

பொருட்கள் வெளிப்பாடு: .............

ஏதேனும் ஏற்பட்டதா?

**7. காயமடைந்த அல்லது மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை:**

| *காயமடைந்த நபர்களின் எண்ணிக்கை* | | *மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை* | |
|---|---|---|---|
| தொழிற்சாலைக்கு உள்ளே | தொழிற்சாலைக்கு வெளியே | தொழிற்சாலைக்கு உள்ளே | தொழிற்சாலைக்கு வெளியே |

**குறிப்பு:**

யாதொரு நபர், தொழிற்சாலை வளாகங்களுக்கு வெளியே, விபத்து அல்லது அபாயகரமான நிகழ்வில் காயமுற்றிருந்தாலோ, மரணமடைந்திருந்தாலோ, அது குறித்த தகவலினை அளிக்கவும்.

**8. காயமுற்ற/மரணமடைந்த நபர்களின் விவரங்கள்**

(a) பெயர் :

(b) வயது :

(c) பாலினம் :

(d) உரிய வயதடைந்த தொழிலாளர்கள் குறித்த பதிவேட்டிலுள்ள தொடர் எண்:

(e) முகவரி :

(f) உரிய வயதடைந்த தொழிலாளர்கள் பற்றிய குறிப்புரை:

(g) பணியின் தன்மை

**9. காயம் எதனால் ஏற்பட்டது:**

வெடிமருந்து —— ; தீ ——

நச்சுப் பொருள் வெளிப்பாடு ——

ஏனையவை —— (துயவு செய்து குறிப்பிடவும்).

**12.** படிவம் எண். 14, விட்டுவிடப்பட வேண்டும்.

**13.** படிவம் எண்கள் 18, 18–A ஆகியவற்றுக்குப் பதிலாக பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது ;–

**"படிவம் எண். 18"**

*(96 ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டது)*

*அபாயகரமான நிகழ்வு உட்பட விபத்து குறித்த அறிக்கை*

தொழிலாளர்கள் மாநில ஈட்டுறுதி கழகத்தின் வேலை அளிப்பவரின் குறியீட்டு எண் ——

பதிவெண் ———

உள்ளூர் தொழிலாளர்கள் மாநில ஈட்டுறுதி கழக அலுவலகத்தின்
பெயரும், முகவரியும்

உரிமம் எண்

தேசிய தொழிலக வகைப்பாட்டு குறியீட்டு எண்

(உரிமத்தில் அளிக்கப்பட்டவாறாக)

1. தொழிற்சாலை பெயரும், முகவரியும்:
2. வேலைக்கு பணி அமர்த்தப்பட்டவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்
3. தொழிலகத்தின் தன்மை (உரிமைக்கு அளிக்கப்பட்டவாறாக)
4. விபத்து அல்லது அபாயகரமான நிகழ்வு ஏற்பட்ட நாள், முறைமாற்றுப் பணி மற்றும் நேரம்:
5. விபத்து அல்லது அபாயகரமான நிகழ்வு ஏற்பட்ட துறை/பிரிவு மற்றும் இடம்
6. (a) நடந்து முடிந்த விபத்து அல்லது அபாயகரமான நிகழ்வு (வகையினை குறிப்பிடுதல்) குறித்த விளக்கம்:

   (b) வெடிமருந்து ——; தீ —— ;

   நச்சுப்பொருட்கள் வெளிப்பாடு: ——

   பொருட்கள் வெளிப்பாடு ——

   ஏதேனும் ஏற்பட்டதா?

**7. காயமடைந்த அல்லது மரணமடைந்த நபர்களின் மொத்த எண்ணிக்கை:**

| *காயமடைந்த நபர்களின் எண்ணிக்கை* | | *மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை* | |
|---|---|---|---|
| தொழிற்சாலைக்கு உள்ளே | தொழிற்சாலைக்கு வெளியே | தொழிற்சாலைக்கு உள்ளே | தொழிற்சாலைக்கு வெளியே |

**குறிப்பு:**

யாதொரு நபர், தொழிற்சாலை வளாகங்களுக்கு வெளியே, விபத்து அல்லது அபாயகரமான நிகழ்வில் காயமுற்றிருந்தாலோ, மரணமடைந்திருந்தாலோ, அது குறித்த தகவலினை அளிக்கவும்.

**8. காயமுற்ற/மரணமடைந்த நபர்களின் விவரங்கள்**

(a) பெயர் :

(b) வயது :

(c) பாலினம் :

(d) உரிய வயதடைந்த தொழிலாளர்கள் குறித்த பதிவேட்டிலுள்ள தொடர் எண்:

(e) முகவரி :

(f) உரிய வயதடைந்த தொழிலாளர்கள் பற்றிய குறிப்புரை:

(g) பணியின் தன்மை

**9. காயம் எதனால் ஏற்பட்டது:**

வெடிமருந்து —— ; தீ —— ;

நச்சுப் பொருள் வெளிப்பாடு —— ;

ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்).

**10. காயம் குறித்த விவரங்கள்**

(a) மரணமடைந்தவர் (மரணம் ஏற்பட்ட நாளும் இறப்பு ஏற்பட்டிருப்பின், நேரமும்);

(b) இறக்கவில்லை எனில் (உடல்நிலை மோசமாக இருப்பின் / கை அல்லது கால் இழப்பு / பார்வை மற்றும் காது கேட்கும் திறன் இழப்பு, எலும்பு முறிவு, நிரந்தர ஊனம், கடுமையான தீப்புண்கள் போன்ற காயத்தின் அளவை குறிப்பிடவும்);

(c) காயமுற்ற நபர், 48 மணி நேரத்திற்கும் மேலாக ஏலாமையுற்று இருந்தார்;

(d) காயமேற்பட்ட பகுதி (அதாவது, வலது கால், இடது கை, இடது கண் முதலியன போன்ற உடலின் பாகம்):

11. (a) விபத்து அல்லது அபாயகாரமான சம்பவம் நடைபெற்றபோது அடிப்பட்ட நபர் என்ன செய்துக்கொண்டிருந்தார் என்பதை தெரிவிக்கவும்.

(b) இப்பணி இடர்மிக்க அல்லது அபாயகரமான நடைமுறை அல்லது செயல்பாட்டில் வருகிறதா? (பின்வரும் பெட்டியில் செய்யவும்).

இடர்மிக்க நடைமுறை ———

அபாயகரமான நடைமுறை அல்லது செயல்பாடு ———

12. (a) விபத்து அல்லது அபாயகரமான சம்பவம் நடைபெற்ற நாளன்று அடிபட்ட நபர் எந்த நேரத்தில் பணியை தொடங்கினார்?

(b) விபத்து அல்லது அபாயகரமான சம்பவம் நடைபெற்ற நாளன்று அவருக்கு முழுவதுமாக அல்லது அதில் ஒரு பகுதி ஊதியம் செலுத்தத்தக்கதா?

13. வேலையளிப்பவரின் போக்குவரத்து வண்டியில் பயணம் செய்துக்கொண்டிருந்தபோது விபத்து அல்லது அபாயகரமான சம்பவம் நடைபெற்றிருந்தால் பின்வருவனவற்றை தெரிவிக்கவும்.

(a) அடிபட்ட நபர் பணியிடத்திற்கும், பணியிடத்திலிருந்தும் பயணியாக பயணம் செய்துக்கொண்டிருந்தவரா?

(b) அடிபட்ட நபர் வேலையளிப்பவரிடமிருந்து வெளிப்படையாக அல்லது உள்கிடக்கையாக அனுமதி பெற்று பயணம் செய்துக் கொண்டிருந்தாரா?

(c) போக்குவரத்து வண்டி வேலையளிப்பவரால் அல்லது வேலையளிப்பவரின் சார்பாக அல்லது வேலையளிப்பவருடன் செய்துக்கொண்ட ஏற்பாட்டின்படி வேறு ஒரு நபரால் இயக்கப்படுகிறதா?

(d) வண்டி சாதாரண பொது போக்குவரத்துப் பணிகளில் இயக்கப்படுகிறதா?

14. நெருக்கடி நிலைமை சமாளிக்கும்போது விபத்து ஏற்பட்ட நேர்வில் பின்வருவனவற்றை தெரிவிக்கவும்.

(a) அதன் தன்மை

(b) விபத்து ஏற்பட்ட சமயத்தில் அடிபட்ட நபர், விபத்து ஏற்பட்ட வளாகத்தில் வேலையளிப்பவரின் வர்த்தகம் அல்லது வியாபார நோக்கத்திற்காக பணியமர்த்தப்பட்டிருந்தாரா?

15. (a) அடிபட்ட நபர் சிகிச்சை பெற்ற அல்லது பெற்றுக் கொண்டிருக்கிற மருத்துவர், அல்லது மருத்துவமனை.

(b) காப்புறுதி செய்துக் கொண்ட நபர் தெரிந்தெடுத்த மருந்தகத்தின் பெயர் அல்லது மருத்துவர்களின் பெயர்.

16. சாட்சிகளின் பெயர் மற்றும் முகவரி (1)

(2)

17. விபத்து அல்லது அபாயரகமான சம்பவம் நடைபெற்றதற்கான காரணம்.

நான் அறிந்தவரையிலும், நான் நம்புகிறவரையிலும் மேற்சொன்ன விபரங்கள் ஒவ்வொரு அம்சத்திலும், சரியாக உள்ளன என்று நான் சான்றளிக்கிறேன்.

நாள் :

மேலாளரின்/அனுபோகதாரரின் கையொப்பம்.

பெயர்

முகவரி மற்றும் தொலைபேசி எண்.

ஆய்வாளர் பூர்த்தி செய்யவேண்டியவை

1. அறிக்கை பெறப்பட்ட நாள்
2. மாவட்டம்
3. புலன் விசாரணை செய்யப்பட்ட நாள்
4. (a) காயம் மற்றும்/அல்லது இறப்பு சம்மந்தப்பட்ட விபத்துக்கு ஒதுக்கப்பட்ட எண்

   (b) காயம் மற்றும்/அல்லது விபத்து ஏற்படாத அபாயகரமான நிகழ்வுகளுக்கு ஒதுக்கப்பட்ட எண்

   (c) காயங்கள் மற்றும்/அல்லது இறப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படாத "பெரும் விபத்துகளுக்கு" ஒதுக்கப்பட்ட எண்
5. விபத்துக்களின் வகைப்பாடு

   (a) காரணம் வாரியாக (குறியீட்டை அளிக்கவும்)

   (b) தொழிற்சாலை வாரியாக (தேசிய தொழிற்சாலை வகைப்பாடு–குறியீட்டை அளிக்கவும்.)

   (c) அபாயகரமான பணி வாரியாக

   (95) ஆம் விதியின்கீழ், விவர அட்டவணையின் எண்ணை அளிக்கவும்.)

   (d) அபாயகரமான செய்முறைப்பணி வாரியாக–பிரிவு 2 (cb)

   (e) தொழில் வாரியாக (தேசிய தொழில் வகைப்பாடு–குறியீட்டு எண்)
6. புலன் விசாரணையின் முடிவு
7. கருத்துரை ஏதுமிருப்பின்

நாள்:

ஆய்வாளரின் கையொப்பம்
பெயர்:

14. படிவம் எண் 21 விட்டு விடப்பட வேண்டும்.

15. படிவம் எண் 25 க்குப் பதிலாக பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

**"படிவம் எண் 25**

*[விதி 77 (4) மற்றும் விதி 103 – இன்கீழ் வரையறுக்கப்பட்டது]*

*தொழிலாளர் வருகைப்பட்டியல் மற்றும் ஈடுசெய் விடுப்புப் பதிவேடு*

தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி மாதம் :
பதிவு எண்

| *தொடர் எண்* | *தொழிலாளரின் பெயர்* | *தொழிலாளர்கள் பதிவேட்டில் எண்* | *தந்தையின் பெயர்* | *பதவிப்பெயர் அல்லது பணியின் தன்மை* | *தொகுதி அல்லது இடைமாற்று எண்* | *பணியிடம்* | *ஆண்டு, பிறந்த நாள், மாதம் பிறப்புப் பதிவேட்டின் நாள் பகுதி நகல் அளிக்கப்பட வேண்டும்* | *பணிக்கான அளவு* | *நாள் (1, 2, 3,——3)* | *விதிவிலக்கு அளிக்கும் அரசாணையின் எண் மற்றும் நாள்* | *ஆண்டு* | *ஜனவரி – மார்ச்க விதிவிலக்கு ஏப்ரல் – ஜூன் அளிக்கும் ஆணை ஜூலை – செப்டம்பர் காரணமாக இழந்த வார அக்டோபர் – டிசம்பர்* | *ஜனவரி – மார்ச்க ஈடு செய்யும் விடுப்பு ஏப்ரல் – ஜூன் அளிக்கப்பட்ட* | *அடுத்த ஆண்டுக் கணக்கிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட எடுக்கப்படாத ஓய்வு நாட்கள்* | *குறிப்புரைகள்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |

(16) எண் 26 விட்டுவிடப்பட வேண்டும்.

(17) படிவம் எண் 26–A விட்டுவிடப்பட வேண்டும்.

(18) படிவம் எண் 27 க்குப் பதிலாக பின்வரும் படிவம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"படிவம் எண் 27

*(95 ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டது)*
*(உடல் தகுதிச் சான்றிதழ்)*

2. தொடர் எண் மற்றும் நாள் :
3. பரிசோதனை செய்யப்பட்டவரின் பெயர் :
4. தந்தையின் பெயர் :
5. பாலினம் :
6. இருப்பிட முகவரி :
7. அவர் பணிபுரியும் அல்லது பணிபுரியவிருக்கும் தொழிற்சாலையின் பெயர்: :
8. அவர் பணிபுரியும் அல்லது பணி புரியவிருக்கும் செய்முறைப் பணி அல்லது துறை :
9. விவரம் :
10. சான்றிதழ் அளிக்கப்பட்டதா :

————————(தொழிற்சாலையின் பெயர்)– (துறையில் மற்றும் செய்முறை) பணிபுரியும் அல்லது பணிபுரிய விருப்பமுள்ளவரும் ————— முகவரியில் வசிப்பவருமான—————— (தந்தையின் பெயர்)————————————என்பவர் (பெயர்) நாள் நேரடியாக பரிசோதனை செய்தேன் என்றும், என்னுடைய பரிசோதனையிலிருந்து அவர் மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் பணிபுரிய தகுதியானவர்/தகுதியற்றவர் என்று நான் சான்றளிக்கிறேன், அவர் பணிபுரியத் தகுதியானவர் அவர்———————————போன்ற அபாயம் இல்லாத ஏனைய பணிகளைப் புரியலாம்.

10A. தகுதியற்றவர் என்று அறிவிக்கப்பட்டு சான்றிதழ் மறுக்கப்பட்டுள்ளதா? — ——கால அளவுக்கு பின்னர், அவர் மீண்டும் பரிசோதனை செய்யப்படலாம்.

11. 1. சான்றிதழ் மறுக்கப்பட்டதற்கு அல்லது

2. சான்றிதழை திரும்ப பெற்றதற்கான காரணங்கள் — அவர் மேலும் பரிசோதனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டார்.

12. முன்னர் வழங்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட சான்றிதழின் எண் — பின்வரும் சிகிச்சையை மேற்கொள்ளுமாறு அவருக்கு ஆலோனை கூறப்பட்டது. முந்தைய சான்றிதழின் தொடர் எண்

பரிசோதனை செய்யப்பட்ட நபரின் இடதுகைப் பெருவிரல் ரேகை/கையொப்பம் — பரிசோதனை செய்யப்பட்ட நபரின் இடதுகைப் பெருவிரல் ரேகை/கையொப்பம்.

சான்றளிக்கும் அறுவைச் சிகிச்சை மருத்துவரின் கையொப்பம். — சான்றளிக்கும் அறுவைச் சிகிச்சை மருத்துவரின் கையொப்பம்.

**குறிப்பு:** உடல் ஊனமுற்றதற்கான காரணம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும், அடிச்சீட்டை சான்றளிக்கும் அறுவைச் சிகிச்சை மருத்துவர் இருத்தி வைத்துக் கொண்டு அட்டையிடப்பட்ட புத்தகத்தில் அல்லது கோப்பில் வைத்து வரவேண்டும்.

18. படிவம் எண் 27–A விட்டுவிடப்பட வேண்டும்;

19. படிவம் எண் 38 விட்டுவிடப்பட வேண்டும்;

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.